**தலைப்பு 277 – மொனறாகலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 277 – மொனறாகலை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மொனறாகலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொனறாகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக ் கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) சேதங்கள் மற்றும் நட்டங்களை அறிக்கையிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொனறாகலை பிரதேச செயலக கட்டிடத்திற்கு 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி இடி விழுந்ததால் கட்டிடத்தின் மின்சார முறைமை மாற்றும் கணினி மற்றும் உதிரி பாகங்களுக்கு சேதமேற்பட்டு ரூபா 9,864,197 ஆன நட்டம் ஒன்று இடம்பெற்றிருந்த போதும் 2023 இன் நிதிக் கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் கூற்றில் ரூபா 7,826,000 என காண்பிக்கப்பட்டுமையால் மீனாய்வாண்டு நிதிக் கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 2,038,197 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | ஏற்றுக் கொள்கிறேன் பதிவேடுகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பேன் | சேதங்கள் மற்றும் நட்டங்களை சரியாக மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**(ஆ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2002 திசெம்பர் 31 ல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,403,558,971 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 2,080,222,407 | ஏற்றுக் கொள்கிறேன் | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | என காண்பிக்கப்பட்டமையால் ஆரம்ப ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் ஒதுக்கம் ரூபா 323,336,564 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 106,867,541 ஆன அலுவலக கட்டிடங்கள், காணி அரச இல்லங்கள், தொடர்பாடல் உபகரணங்கள், கணனி மற்றும் உபாகங்கள், எழுது கருவிகள், விவசாய உபரணங்கள் மற்றும் மின் உபகரணங்கள் நிதி நிலைமை கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படாயையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ஆலைகள் பொறிகள் ஒதுக்கம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்திற்குரிய மொத்தம் ரூபா 33,500,000 ஆன 05 பயணிகள் போக்குவரத்து வண்டிகள் (Passenger Vehicle) மற்றும் ரூபா 25,380,000 ஆன 23 விவசாய வாகனங்கள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்படாயையால் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் ஆலைகள் பொறிகள் ஒதுக்கம் ரூபா 58,880,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | மாவட்ட செயலகத்திற்கு உரித்துள்ள வாகனங்கள் அனைத்தினதும் பெறுமதியைம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெள்ளவாய மற்றும் தனமல்வில பிரதேச செயலகங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அரச வீடுகள் மற்றும் மொனறாகல பிரதேச செயலகத்துக்கு சொந்தமான நிர்வாக உத்தியோகத்தர் உத்தியோக பூர்வவிடுதி மற்றும் அது அமைந்துள்ள காணனி மதிப்பீடு செய்யப்பட்டு அப்பெறுமதி மீளாய் ஆண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்கின்றேன் | உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதி கூற்றுகளுக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மொனறகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகங்களுக்குரிய ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த அலுவலக உபகரணங்கள், கணனிகள் மற்றும் உப பாகங்கள் தொலைத்தொடர்பு | புதிய New Cigas நிகழ்ச்சி திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட Bos Report மென்பொருளில் பிரதிகள் சமர்ப்பிப்பதற்கு பிரதிகளை | அட்டவணைகளை சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள், மின்சார உபகரணங்கள் விவசாய மற்றும் கால்நடை உபகரணங்கள் தளபாட உட்காரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 341,877,791 கூட்டு பெறுமதியான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன் | |
| (ii) | மீளாய்வாண்டின் திறைசேரி எஸ்.ஏ 82 படிவத்தின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் ஆரம்ப மீதிக்கு ரூபா 6,900,000 சேர்த்தல்கள் மற்றும் ரூபா 10,220,000 அகற்றியல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அவற்றை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூலம் சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இடம் பெற்றிருந்த இரட்டிப்பு வழுக்கள் சீராக்கப்பட்டுள்ளது | அகற்றல் மற்றும் சேர்த்தலுக்காக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | மோனறாகஃல மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்காக 30,283 உணவு பொதிகள் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,513,127 தொகை மாவட்ட செயலகத்தினால் செலவிடப்பட்டு இருந்ததுடன் நிதி பொருளாதார நிரந்தர மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் ஆலோசனை பிரகாரம் உணவு பாதுகாப்பை குறைந்த வருமானம் வருமான குடும்பங்களின் குடும்ப அலகுகளை தெரிவு செய்யும் 11 நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 30,283 நலனாளிகள் தெரிவு செய்யும்போது பயன்படுத்தப்பட்டிருந்த நியதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பிரிவொன்றுக்காக 5-10 இற்கும் இடைப்பட்ட தாள்கள் எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டமையால் மாவட்ட செயலகத்தில் தகவல்கள் சேகரித்து வைக்கப்படவில்லை | நலனாளிகளை தெரிவு செய்யும்போது அவர்களுக்காக பொருத்தமான உறுதிப்படுத்துவ தற்காக சானறுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்ும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மோனறாகஃல பிரதேச செயலாளர் பிரிவில் இல்லாமல் போன செரமிக் கைத்தொழிலை மேம்படுத்தல் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் கொவுல்ஆற செரமிக் கிராமம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கைப்பணிச் சபையின் கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 6 | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை பொறுப்பான உத்தியோகத்தரின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை கைத்தொழில் அமைச்சின் மூலம் பெயரிடப்பட்ட | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களுக்காக ரூபா 4,187,281 தொகை செலவிடப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்திலிருந்து எதிர்பாக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | முயற்சியாலர்கள் ஒருவர் இணைப்பாளராக தொடர்புபடுத்தப்பட்டு அடுத்து வரும் நிகழ்ச்சிகள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 யூலை 02 ஆம் திகதி 2018/07 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் கூடிய முதலீட்டு இணைப்பு சதவீதத்தின் பிரகாரம் நிலையான வைப்புக்களில் முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மொனராகலை மாவட்டத்தின் 09 பிரதேச செயலக பிரிவுகளில் சமர்த்தி சமுதாய வங்கிகளால் அரச வங்கிகளில் 218 நிலையான வைப்புக்களில் ரூபா 1,124,670,498 முதலீடு செய்யப்பட்டிருந்த போதும் கூடிய வட்டி சதவீதம் என்று செலுத்தப்படுகின்ற வங்கிகளில் முதலீடு மேற்கொள்ளாமையால் வட்டி வருமானமாக பெறவேண்டிய ரூபா 10,180,800 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சமுர்த்தி சமுதாய வங்கிகளுக்கு கிடைக்காமல் போயிருந்தது. | பெறுகை செயற்பாடு பின்பற்றப்பட்டு முதலீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | உயர்ந்த நலன்களை கிடைக்கும் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) i | கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் மூலம் சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற கடன் தொகை 10 மாத தவணைகளில் கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 07 பிரதேச செயலகங்களால் 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 11,015,879 ஆன சுழற்சி கடனுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 4,338,842 ஆன நிலுவை கடன் தொகை மற்றும் ரூபா 414,329 ஆன நிலுவை வட்டியாக மொத்தம் 4,753,171 ஆன தொகை மேலும் அறவிடப்பட வேண்டி இருந்தது. | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. | சௌபாக்கிய அபிவிருத்தி செயலகத்தின் 2022 ஜுன் 28 ஆம் திகதிய SDB/SPY/GS/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் தொடர்ந் செயற்பாட்டில் உள்ள கிராம சக்தி தாய் சங்கங்களில் காணப்படும் பணத்தை நுண் நிதி கடன் நிகழ்ச்சி திட்டத்துக்காக அத்தியவசிய | கிராம சக்தி மக்கள் சங்கங்கள் செயலற்ற நிலையில் காணப்படுவதுடன் நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் | கணக்குகளில் காணப்படும் நிதியத்தை ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் சங்கத்தின் அங்கத்தவர்களுக்காக தேவையான ஏனைய நிகழ்ச்சிகளுக்காக பயன்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ள போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டத்தில் கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் கீழ் காணப்படும் 125 சங்கங்களுக்குரிய தாய் சங்கங்களில் ரூபா 77,515,991 தொகையும் நுண் நிதியக் கணக்குகளில் ரூபா 6,653,272 தொகையுமாக ரூபா 84,169,263 தொகை பயன்பாட்டுக்கு எடுக்காமல் விளைவற்று காணப்பட்டது. | நடவடிக்கை எடுப்பார்கள் | |
| (ஈ) | விவசாய நீர்ப்பாசன மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் சிறிய அளவிலான விவசாய வியாபாரங்களுக்கு பங்கு பெறும் முயற்சி திட்டத்தின் கீழ் வேகரயாய ரன்லிய தொழில் முயற்சியாளர்களுக்கு அபிவிருத்தி மன்றத்திற்காக நிலக்கடலை தயாரிக்கும் நிலையம் ஒன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 1,925,569 ஆன பெறுமதிக்கு 2020 அக்டோபர் 14 ஆம் திகதி கிராமிய முதியோர் அமைப்பு ஒன்றுக்கு கையளிக்கப்பட்டு இருந்ததுடன் பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 2023 ஜூன் 19 ஆம் திகதி ரன்லிய முயற்சியாளர்கள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நோக்கத்துக்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | இச்செயற்திட்டத்தின் செயற்படுத்தும் பொறுப்பு சிறிய அளவிலான விவசாய வியாபார பங்களிப்பாளர் நிகழ்ச்சி திட்டத்திற்கு உரியதாகும். | நிலையத்தை நோக்கத்துக்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றன.

| | அவதானிப்பு சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | - | ஏதேனும் பதவி ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட வீடு தவிர ஏனைய அனைத்து வீடுகளினதும் குத்தகைக்கால எல்லை 05 ஆண்டுகளில் முடிவடைய வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்குரிய மற்றும் 02 பிரதேச செயலாளர்களுக்கு உரிய 05 அரச வீடுகளில் குடியிருந்த 05 உத்தியோகத்தர்கள் உடன்படிக்கை காலம் முடிவடைந்து குறித்த வீடுகளில் குடியிருந்தமையால் காத்திருப்பு பட்டியலில் உள்ள 44 உத்தியோகத்தர்ளுக்குக் இடையே தகைமைகளை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்கு வீடுகளை வழங்க முடியாமல் இருந்தன | 05 உத்தியோகபூர்வ விடுதிகள் விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் . | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | தாபன விதிக் கோவை XX IV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு | 1,737,408 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றின் பிரகாரம் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, மரணித்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் 10 பேரிடம் இருந்து | வெவ்வேறு குறைபாடுகளால் அறவிடுவது தாமதிக்கப்பட்டது. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 ஆண்டுகள் முதல் 20 வருடங்கள் வரை கால வீச்சு கடந்திருந்த போதும் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 49,099,014 571 | வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் 7 பிரதேச செயலகங்களுக்குரிய வைப்புக்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 02 ஆண்டுகளைக் கடந்த வைப்புகள் விடுவிக்கப்பட வேண்டும் | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் இனங் காணப்பட்டு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2.3 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் உமாஓய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டிருந்த 03 காணிகளுக்கான பிரதான மதிப்பீடு கிடைக்கப்பெறும் வரை காணிகளைக் கையேற்பதற்கான முற்பணமாக 2013 ஆம் ஆண்டு பயனாளிகள் இருவருக்கு ரூபா. 850,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 திசம்பர் 04 ஆம் திகதி அக் காணித் துண்டுகளின் பிரதான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 1,350,000 டின தீர்மானிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 09 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட முற்பணத் தொகை கழிக்கப்படாது மொத்த மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா. 1,350,000 | திணைக்கள மட்டத்திலான விசாரனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இறுதி அறிக்கையினை விரைவில் சமர்ப்பிப்பேன். | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையினை மீள் அறவீடு செய்வதுடன், மேலதிக கொடுப்பனவை மேற்கொண்ட உத்தி யோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா. 850,000 தொகையினை அறவீடு செய்வதற்காக வெல்லவாய மாவட்ட நீதிமன்றில் 2018 நவம்பர் 19 ஆம் திகதி M11836 இலக்க வழக்கு தொடுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியன்று 08 வருடங்கள் கடந்திருந்த நிலையிலும் அத் தொகையினை அறவீடு செய்வதற்கு முடியாது போயிருந்தது. அதனடிப்படையில் அக் கொடுப்பனவை மேற்கொண்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த தொகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்திற்கு சொந்தமான 02 வாகனங்களை கையற்றுவதற்காக 04 அங்கத்தவர்களைக் ொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவ்விரண்டு வாகனங்களும் முறையே ரூபா. 40,000 மற்றும் ரூபா. 150,000 என்ற மிகக் குறைந்த பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக குழு அங்கத்தவர்கள் மற்றும் விடயப் பொறுப்பு அதிகாரி ஆகியோர் அரசிற்கு பொருளாதார ரீதியிலான நட்டத்தினை ஏற்படுத்தும் எண்ணத்தில் வேண்டுமென்றே செயற்பட்டிருந்தமை கணக்காய்வின் பொது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன் | குறைந்த பெறுமதிக்கு மதிப்பீடு செய்தல் தொடர்பில் விசாரனை மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை மேற்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி ஆணையாளர் நாயகத்தின் 2008 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 2008/04ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.3.2 உப பிரிவின் (ஊ) பந்தி மற்றும் 2020 பெப்ரவரி 03 ஆம் திகதியிடப்பட்ட 2008/04(1)ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 03இன் பிரகாரம் அரச காணிகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான நபர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்ட இறுதித் திகதியிலிருந்து 03 மாதங்களினுள் அனுமதிப்பத்திரங்கள் தயார் செய்யப்பட்டு விண்ணப்பதாரர் களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதும், 11 பிரதேச செயலகங்களின் மூலம் 1,826 பயனாளிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு 01 முதல் | காணி நடவடிக்கைகளுக்கான தினங்கள் ஒதுக்கப்பட்ட போதும், அவை முறையாக செயற்படுத்தப்படாமையினாலும், மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்படும் ஆவணங்கள் பல்வேறு குறைபாடுகள் காரணமாக திருப்பி அனுப்பப்படுவதாலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. | அரச காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 05 வருடங்கள் வரையிலான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மொனராகலை மாவட்டத்தின் 05 பிரதேச செயலக பிரிவுகளுடன் தொடர்பான 1995 முதல் 2023 வரையிலான நீண்ட காலமாக குத்தகை அடிப்படையில் 30 பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 116,517,935 தொகை மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகையை அறவிடுவதற்காக விசேட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் வாடகை செலுத்தத் தவறுவோரின் குத்தகை அனுமதியை இரத்துச் செய்து காணியின் உரிமையை அரசிற்குப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிடப்பட வேண்டிய நீண்டகால குத்தகையினை விரைவில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மொனராகலை மாவட்டத்தின் 04 பிரதேச செயலக பிரிவுகளில் 2015 ஆம் ஆண்டு முதல் அரசுக்குச் சொந்தமான காணிகளை சட்ட விரோதமாக அபகரித்தலுடன் தொடர்பான 79 சம்பவங்கள் பதியப்பட்டிருந்ததுடன், அவை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்து வெளியேற்றல் கட்டளைகளை வழங்குவதற்கோ அல்லது உரிமையினை மீளக் கையேற்பதற்கோ பிரதேச செயலகங்களின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட விரோத அபகரிப்புக்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வெளியேற்றல் கட்டளைகளை வழங்குவதற்கோ அல்லது உரிமையினை மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மொனராகலை மாவட்டத்தின் 09 பிரதேச செயலக பிரிவுகளில் அரசுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்தல் தொடர்பிலான 59 சம்பவங்கள் தொடர்பான மீளக் கையேற்றல் செயற்பாட்டிற்காக 03 தொடக்கம் 48 வருடங்கள் வரையான காலம் செலவாகியிருந்த போதும், மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரை மீளக் கையேற்றல் செயற்பாடு நிறைவு பெற்றிருக்கவில்லை. | மிகவும் பழைமையான கோவைகளை மீளப் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதனாலும், விண்ணப்பதாரிகள் உயிருடன் இல்லாதிருப்பதன் காரணமாகவும் தாமதமடைந்துள்ளது. | அரசுக்குச் சொந்தமான காணிகளை மீளக் கையேற்றல் செயற்பாடுகள் வினைத்திறனுடையதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | மடுள்ள பிரதேச செயலாளர் பிரிவில் 34 பயனாளிகளுக்கு மத்திய தர கொள்வனவு விலையின் கீழ் ரூபா. 5,594,500 பெறுமதியான 34 வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா. 4,529,750 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு கொள்வனவாளர்களுக்கு கடிதம் மூலமாகவும் தொலைபேசி அழைப்பு மூலமாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. | கொள்வனவு விலையினை அறவீடு செய்வது தொடர்பில் வினைத்திறனுடன் செயற்படல் வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) கிடைக்கப்பெறாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொனராகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 110 சமூர்த்தி குடும்பங்கள் தொடர்பாக பரிசோதனை செய்தபோது 08 வருடங்கள் முதல் 28 வருடங்கள் காலமாக சமூர்தி நலன்களை பெற்று கொள்ளப்பட்டிருந்ததுடன் தற்போது அஸ்வசம நலன் உரித்தும் கிடைக்கப் பெற்றிருந்த போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அவர்களின் வறுமை ஒழித்து பொருளாதாரத்தினை கட்டியெழுப்பு வதற்காக அரச உத்தியோகத்தர்கள் உட்பட நலனாளிகளுக்கும் முடியாது இருந்தது. | ஒவ்வொரு நபரினதும் தனிப்பட்ட காரணங்கள் அடிப்படையில் பொருளாதரத்தை கட்டி எழுப்புவதற்கு சந்தர்ப்பம் ஒன்று காணப்படவில்லை. | எப்போதும் நலன்களில் மீது தங்கி இருக்காமல் நலனாளிகளின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை வெவ்வேறு நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் 04 பிரதேச செயலங்க்களுக்கு கிடைத்திருந்த ரூபா 1,064,219 பெறுமதியான 936 பிளாஸ்டிக் கதிரைகள் 04 அலுமாரிகள், 3 சிங்கர் தையல் இயந்திரங்கள், 8 பூங்கா குடைகள், 01 புல் வெட்டும் இயந்திரம் மற்றும் 03 நீர் வடிகட்டிகள் என 955 உபகரணங்கள் மீளாயவாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நலனாளிகளுக்கு பகிர்ந்து அளிக்காமல் களஞ்சியங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. | பொருட்களை பகிர்ந்தளிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பேன் | வெவ்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கிடைத்த பொருட்களை நலனாலிகளுக்கு விரைவில் பகிர்ந்து அளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்டிருந்த சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செவனகல பிரதேச செயலக பிரிவில் 03 கிராம சேவையாளர்கள் பிரிவில் விவசாய விதை உற்பத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 5,214,849 செலவிடப்பட்டிருந்ததுடன் உற்பத்தி கிராமத்தில் எந்த ஒருவராலும் விதை உற்பத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன் | விதை அத்தாட்சிப்படுத்தலை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட வேண்டும் |

### 3.3 செயற்றிட்டத்தை நிறைவேற்றும் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 பிரதேச செயலக பிரிவுகளில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வெள்ளம், மண்சரிவு மற்றும் அதி ஆபத்து காரணமாக தமது குடியிருப்பு இடங்களை விட்டு அகற்றப்பட்ட மீள் குடியிருப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட 13 பேருக்கு மொத்தம் ரூபா 21,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நலனாளிகளுக்கு வெவ்வேறு காரணங்களால் செயற்றிட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது | நலனாளிகளை ஆபத்தான பிரதேசங்களில் இருந்து அகற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சியம்பலாண்டுவ பிரதேச செயலக பிரிவில் கெபிளித்த பிரதேசத்தில் காணி அளவிடும் செயற்திட்டதற்காக மீளாய்வண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21,960,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 இன் வருடாந்த அறிக்கைக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஜனவரி 27 ஆந் திகதிய அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 1.2.1.4 உப பிரிவின் பிரகாரம் உயர் தரத்திலான குறைந்த கிரயத்தை மேற்கொண்டு அதன் பெறுபேறொன்றாக உயர் பொருளாதார நலன்களை பெற்றுக் கொள்ளும் நோக்கில் பெறுகைச் செயற்பாடு பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் மாவட்ட செயலகம் மற்றும் தனமல்வில பிரதேச செயலதத்தினால் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்கள் பொருட்கள் கொள்வனவுக்காக ரூபா 8,711,734 செலவிடப்பட்டிருந்தது. | குழு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது | பெறுகைச் செயற்பாடு பின்பற்றப்பட வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 770(4) இன் பிரகாரம் அரசின் அமைச்சுகளில் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பயன்படுத்த முடியாத வாகனங்கள் இனங் காணப்பட்டு கைதவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் நீண்ட காலமாக கைதவிர்ப்பதற்கு இனங் காணப்பட்டு இருந்த மாவட்ட செயலகத்திற்குரிய 05 வாகனங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 05 வாகனங்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாகனங்களை கைதவிர்க்கும் செயற்பாட்டை விரைவில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்குரிய 13 வாகனங்கள் மற்றும் உரித்து உறுதிப்படுத்தாத 03 வாகனங்கள் 4 ஆண்டுகளாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப் படாமல் இருந்ததுடன் வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் தாமதமானமையால் வாகனங்களின் பொருளாதார பெறுமதி குறைந்து அரசுக்கு அறவிடக்கூடிய வருமானம் இழக்கப்பட்டு இருந்தது. | எதிர்வரும் நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கைகளை விரைவில் எடுத்தல் வேண்டும் |

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் இறுதி பரிசோதனை அறிக்கை, நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்று 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வெல்லவாய பிரதேச செயலகத்திற்குரிய 2020 நவம்பர் 11 ஆந் திகதி விபத்துக்குட்பட்டமையால் ரூபா 664,400 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இறுதி பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் சேதங்களின் கீழ் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | குழு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் சேதங்களை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொனறாகலை மாவட்டத்தின் 10 பிரதேச செயலகங்களில் ஓய்வூதிய பெறும் 50 பேருக்கு ஓய்வூதியமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 12,636,910 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 7,327,607 தொகை மேலும் அறவிடப்பட வேண்டி இருந்தது. | ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 9/2008 மற்றும் ஓய்வூதிய ஆலோசணை கடித இலக்கம் 6/2019 இன் பிரகாரம் கூடுதலான ஓய்வூதியம் கொடுப்பனவு செய்ய நேர்ந்துள்ளது. | கூடுதலான கொடுப்பனவை மீள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) 2022/23 பெரும் போகத்தில் அரசின் நெல் கொள்வனவு செயற்பாட்டின் கீழ் 10 பிரதேச செயலக பிரிவுகளால் ரூபா 1,049,189,326 செலவிடப்பட்டு 9,335,360 கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டு அரிசியாக மாற்றி நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கும் போது 04 பிரதேச செயலப் பிரிவுகள் தயாரிக்கப்பட்டிருந்த நலனாளிகள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் 4 பிரதேச செயலக பிரிவுகளில் நிரந்தர பெயர் பட்டியல்களில் விலகி வேறு பெயர் பட்டியலுக்காக அரிசி பகிர்ந்து அளிக்கப்பட்டதுடன் 02 பிரதேச செயலக பிரிவுகளில் முதலாவது சுற்றில் அரிசி பகிர்ந்ததும் பெயர் பட்டியல் இரண்டாவது சுற்றில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன் | நலனாலிகளை தெரிவு செய்யும் அடிப்படையை கணாக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் மேலும் நிரந்தர பெயர் பதிவேடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் பெயர் பட்டியலை மாற்றுவது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2022/2023 பெரும் போகத் தெரிவு செய்யப்பட்ட நலனாலிகளுக்கு அரிசி பகிர்ந்து அளிக்கும் போது 4,976,460 பெறுமதியான கையொப்ப பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 05 பிரதேச செயலகங்களில் ரூபா 466,693,364 ஆன கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன் | அரிசி பகிர்ந்தளிப்பதற்குரிய கையொப்ப பதிவேடு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஈ) மொனராகல பிரதேச செயலகத்திற்குரிய 04 ஆம் இலக்க நிர்வாக உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ விடுதியை 2003 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களுக்கு ஒருங்கிணைப்பு அலுவலகம் ஒன்றாக நடத்திச் | ஏற்றுக்கொள்கிறேன் அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன | நிலுவை வீட்டு வாடகை மற்றும் நிலுவை கட்டணங்களை விரைவில் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செல்வதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காலப் பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 356,400 ஆன வீட்டு வாடகை மற்றும் நீர் கட்டணங்கள் ரூபா 33,591 ஆக மொத்தம் ரூபா 389,991 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (உ) | மாவட்ட செயலகத்தின் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 24 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகை ரூபா 496,375 மீலாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை காணப்பட்டதுடன் 21 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 415,998 தொகை அந்த உத்தியோகத்தர்களின் ஓய்வு பெற்று மற்றும் இடமாற்ற கிடைத்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன் | நிலுவை வீட்டு வாடகை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணுதல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சசி நிரலின் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நோக்கி அடைந்து கொள்ளல் தொடர்பான பரிசோதனையின் போது மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் 2030 தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் முறையான கவனம் செலுத்தப் படாதிருந்ததுடன் ஆண்டில் கிடைத்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 06 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப் பட்டிருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் 2030 இன் பிரகாரம் 11 நோக்கங்கள் தொடர்பில் முறையான ஆய்வொன்றுக்கு உட்படுத்தியிருக்கவில்லை | இலக்குகளை இனங்காணும் போது வெவ்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங் கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்டத்தினதும் அதன் மக்கள் தேசிய அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் நிலையான அபிவிருத்தியை நோக்கி தேசிய கொள்கைக்கு இணங்க முறையான திட்டமொன்றுடன் வளங்கள் மற்றும் நிறுவன செயற்திறனான வழி நடாத்துகின்ற முறையான கூட்டமைப்புடன் மக்கள் தேவைப்பாடு செயற்திறனாக நியாயமாக மதிக்கக் கூடிய மற்றும் நட்பு ரீதியாக நிறைவேற்றுதல் நிறுவனத்தின் செயற்பணியாக இருந்த போதும் மொனறாகலை மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயலாற்றல் குறிகாட்டிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (அ) புதிய கிராமம் புதிய நாடு நிகழ்ச்சிக்கு தேயிலை காணி உரித்தினை சட்ட ரீதியாக்கும் செயன்முன்னேற்றம் 50 சதவீதமும் மாவட்ட காணி பிரிவிற்குரிய காணிகளுக்காக அனுமதிப்பத்திரங்களை தயாரிக்கும் செயன்முன்னேற்றம் 22 சதவீதமாகவும் காணிக்காக கொடைப் பத்திரங்களை தயாரித்தலின் செயன் முன்னேற்றம் 1 சதவீதமாகவும் நீண்டகால குத்தகைப் பத்திரம் தயாரித்தலின் செயன்முன்னேற்றம் 7 சதவீதமாகவும், விடுவிக்கப்பட்ட கொடைப் பத்திரங்கள் தயாரித்தலின் செயன் முன்னேற்றம் 17 சதவீதமாகவும் அரச நிறுவனங்களுக்காக காணி கையளித்தலின் செயன்முன்னேற்றம் 24 சதவீதமாகவும் காணி சிக்கலுக்கு தீர்வு வழங்குவதன் செயன்முன்னேற்றம் 42 சதவீதமாகவும் என குறிகாட்டிகளின் செயன் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் இருந்தன. | அரச நிறுவனங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு முடியாமை மற்றும் தாமதம் பாரியளவு அளவீட்டு கோரிக்கைகள் வருவதால் குறித்த செயன் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. | செயலாற்றல் குறிகாட்டி செயன் முன்னேற்றத்தினை மேம்படுத்துவதற்கு இருக்கும் தடைகளை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இளைஞர் விவசாய முயற்சியாளர்களின் அபிவிருத்தியின் செயன் முன்னேற்றம் 55 சதவீதமாகவும், வெளிநாட்டு தொழில் மேம்படுத்தல் பிரிவின் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்பும் செயன் முன்னேற்றம் 63 சதவீதமாகவும் விதாதா அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் தரப் பரிசோதனை அறிக்கை மற்றும் நியமங்களை உறுதிப்படுத்தி வழங்கும் செயன் முன்னேற்றம் 52 சதவீதமாகவும், புத்தாக்க மேம்படுத்தல் செயன்முன்னேற்றம் 10 சதவீதமாகவும் சுற்றுலா, அலுவல்கள் மேம்படுத்தல் பிரிவின் கீழ் சுற்றுலா கவர்ச்சிகரமான இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் 10 சதவீதமாக இருந்ததுடன் அச்செயலாற்றல் | தொழில்சார் தகைமை இல்லாமை, நிதி இயலளவு இல்லாமை மொழி தேர்ச்சி இல்லாமை, இலக்கை நிறைவேற்றும் சிக்கல்கள் உருவாகியிருந்தமை விதாதா அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பொருட்களின் தரம் குறைவடைந்திருந்தது. மேலதிக நிதிச் செலவினத்தை உற்பத்தியாளர்களுக்கு செலவிடுவதற்கு முடியாமை. | |

| | | |
|---|---|---|
| மட்டத்தை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவ்லலை | சுற்றுலா கவர்ச்சிகரமான இடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்கு நிதி ஏற்பாடுகள் கிடைக்காமையே காரணமாகும். | |

**5. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆகஸ்ட் 22 ஆந் திகதியில் 1/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் கூடிய சேவைக் காலம் 05 ஆண்டுகள் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்துள்ள அனைத்து உத்தியோகத்தரும் வேறு சேவை நிலையங்களில் சேவை புரிவதற்கு இடமளிப்பதற்கு இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும் மொனறாகலை மாவட்ட செயலகத்தில் சேவை புரிந்த 30 உத்தியோகத்தர்கள் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த 731 உத்தியோகத்தர்கள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 ஆண்டுகள் முதல் 33 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் ஒரே சேவை நிலையத்தில் சேவை ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | 2024 ஆம் ஆண்டில் இடமாற்றங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சேவைக்காலம் 05 ஆண்டுகளை மிகைத்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தில் 14 பிரிவு களுக்குரிய 27 உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாகவும் 01 பதவிக்குரிய 34 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் மொனறாகல் மாவட்ட த்தின் 11 பிரதேச செயலகங்களில் 14 பதவிகளுக்குரிய 148 உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக வும் 02 பதவிகளுக்குரிய 191 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் இருந்தனர். | ஏற்றுச் கொள்கின்றேன். | மிகை மற்றும் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |